தனியார் நிறுவன உரிமையாளரிடம் அதிக வட்டி கேட்டு மிரட்டல்

டிஐஜி அலுவலகத்தில் புகார்

கோவை, ஏப் 10: திருப்பூர் மாவட்டம் காங்கயம் அருகே உள்ள சிவன்மலையை சேர்ந்தவர் செல்வராஜ் (33). இவர், நேற்று தனது பெற்றோருடன் கோவை ரேஸ்கோர்சில் உள்ள கோவை சரக டி.ஐ.ஜி. அலுவலகம் வந்தார். பின்னர், அவர்கள் டி.ஐ.ஜி. சசிமோகனை சந்தித்து புகார் மனு அளித்தனர். அதில் கூறியிருப்பதாவது:

சொந்த ஊரில் எனது தந்தை நிறுவனம் ஒன்றை நடத்தி வருகிறார். தொழில் அபிவிருத்திக்காக கடந்த 2015ம் ஆண்டு தனியார் நபரிடம் எனது தந்தை ரூ. 8 லட்சம் கடன் வாங்கினார். அதற்கு மாதம் தோறும் ரூ.24 ஆயிரம் வட்டி கட்டினார். பின்னர் ரூ.5 லட்சத்தை மொத்தமாக கொடுத்து அசல் தொகையில் கழித்துக் கொள்ளும் படி கூறினார்.

அந்த பணத்தை பெற்றுக்கொண்ட நபர், பணம் வட்டியில் கழிக்கப்பட்டது என கூறி மீண்டும் வட்டி செலுத்த வேண்டும் என வற்புறுத்தி எங்களுக்கு சொந்தமான 12 சென்ட் நிலத்துக்கான பத்திரங்களை பெற்று கொண்டார். மேலும் நாங்கள் வட்டி மட்டும் ரூ. 40 லட்சத்துக்கும் மேல் கொடுத்து விட்டோம். ஆனால், எங்களிடம் பெற்ற நில பத்திரத்தை வழங்க மறுக்கிறார். அதிக வட்டி செலுத்த வேண்டும் என்று மிரட்டுகிறார். தற்போது அந்த நிலத்தின் மதிப்பு ரூ.80 லட்சம் ஆகும். இது தொடர்பாக காங்கயம் போலீசில் புகார் அளித்தும் எந்த விதமான நடவடிக்கையும் இல்லை. எனவே தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

ஒன்றிய அமைச்சர் ராஜ்நாத் சிங் கோவை வருகை

வெலிங்டன் ராணுவ கல்லூரிக்கு புறப்பட்டு சென்றார்

சூலூர், ஏப்.10: ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று தனி விமானத்தில் கோவை சூலூர் விமானப்படை தளத்திற்கு வருகை புரிந்தார். அவரை, ஒன்றிய இணை அமைச்சர் எல். முருகன் பூங்கொத்து வழங்கி வரவேற்றார்.

▶ கோவை சூலூர் விமானப்படை தளத்தில் ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கை ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் வரவேற்றார். அருகில் ராணுவ அதிகாரிகள்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள வெலிங்டனில் உள்ள ராணுவ கல்லூரியில் இன்று (10ம் தேதி) நடைபெற உள்ள நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக ஒன்றிய பாதுகாப்புத்துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் நேற்று தனி விமானத்தில் சூலூர் வருகை தந்தார்.

சூலூர் விமானப்படை தளத்திற்கு வந்தவுடன், அவரை முப்படை தளபதிகள், கோவை கலெக்டர் பவன்குமார், சூலூர் விமானப்படை அதிகாரிகள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

முன்னதாக ஒன்றிய இணை அமைச்சர் எல். முருகன் தலைமையில் ராஜ்நாத் சிங்குக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பாதுகாப்புத்துறை அமைச்சரான ராஜ்நாத் சிங்கின் வருகையை முன்னிட்டு, சூலூர் விமானப்படை தளத்தை சுற்றியுள்ள 10 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு பாதுகாப்பை பலப்படுத்தப்பட்டு இருந்தது. இதன் ஒரு பகுதியாக, டிரோன்கள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டது.

மேலும், விமானப்படை தளத்திற்கு செல்லும் சாலைகளில் வாகன சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டு, காவல்துறை மற்றும் விமானப்படை பாதுகாப்பு படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர். சூலூர் விமானப்படை தளத்தில் இருந்து, ராஜ்நாத் சிங் சாலை மார்க்கமாக நீலகிரி மாவட்டத்தில் உள்ள வெலிங்டன் ராணுவ பயிற்சி பள்ளிக்கு புறப்பட்டார். இன்று அங்கு நடைபெறும் முக்கிய நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்ச்சியில், ராணுவ பயிற்சி மையத்தின் செயல்பாடுகள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்யப்படும் என தெரிகிறது. பின்னர், அவர் ஹெலிகாப்டர் மூலம் மீண்டும் சூலூர் விமானப்படை தளத்திற்கு திரும்புகிறார்.

சாலை விரிவாக்கத்திற்காக

வெட்டப்பட உள்ள 1604 மரங்களில் 262 மரங்களை மறு நடவு செய்ய திட்டம்

▶ மேட்டுப்பாளையம் - அவிநாசி சாலையில் வெட்டி அகற்றப்பட்டு வரும் சாலையோர மரங்கள்.

மேட்டுப்பாளையம், ஏப்.10: மேட்டுப்பாளையம்- அவிநாசி இடையேயான 38 கி.மீ சாலை விரிவாக்கத்தின் போது 1604 மரங்களை வெட்டி அகற்றப்படும் பணி தீவிரமாக நடந்து வரும் நிலையில், இவற்றில் 262 மரங்களை மறுநடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 551 மரங்களை வெட்டி அகற்றவும், 121 மரங்களை மறு நடவு செய்யவும் பசுமை குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

திருப்பூர், நீலகிரி, கோவை மாவட்டங்களின் மையப் பகுதியாகவும், தமிழக, கேரள, கர்நாடகா மாநிலங்களின் எல்லை பகுதியாகவும் மேட்டுப்பாளையம் இருந்து வருகிறது. இதனால் 24 மணி நேரமும் மேட்டுப்பாளையத்தில் இருந்து அன்னூர், கோவை, கோத்தகிரி, குன்னூர், சத்தி சாலைகளில் வாகன போக்குவரத்து இருந்து கொண்டே இருக்கும்.

குறிப்பாக கரூர், சேலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் வரும் வாகன ஓட்டிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் அன்னூர், மேட்டுப்பாளையம் வழியாக நீலகிரி மாவட்டத்தில் குன்னூர், ஊட்டி, கோத்தகிரி உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்ல அவிநாசி சாலையை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் நாளுக்கு நாள் மேட்டுப்பாளையம் - அன்னூர் - அவிநாசி சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்து வருகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழக அரசு இருவழிச்சாலையாக உள்ள மேட்டுப்பாளையம் - அவிநாசி வரை உள்ள சுமார் 38 கிமீ தொலைவு சாலையை ரூ.238 கோடி மதிப்பில் நான்கு வழிச்சாலையாக மாற்றம் செய்ய உள்ளது. இதனை முன்னிட்டு முதற்கட்டமாக சாலையின் இருபுறமும் உள்ள சுமார் 1604 மரங்களை வெட்டி அகற்றும் பணி கடந்த சில தினங்களாக தொடர்ந்து முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் சாலை விரிவாக்க பணிகளுக்காக மேட்டுப்பாளையம் - அவிநாசி வரை உள்ள சாலையின் ஓரங்களில் உள்ள 1604 மரங்களில் 1342 மரங்களை வெட்டி அகற்றவும், 262 மரங்களை மறு நடவும் செய்யப்பட உள்ளதாக மாநில நெடுஞ்சாலைத் துறை தெரிவித்துள்ளது.

நெடுஞ்சாலைத்துறை தகவல்

▶ ஏற்கனவே சாலையோரங்களில் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரும் மரக்கன்றுகள்.

இதுகுறித்து நெடுஞ்சாலைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்: மேட்டுப்பாளையத்தில் இருந்து அவிநாசி வரை உள்ள 38 கிமீ சாலை தற்போது இருவழிச்சாலையாக உள்ளது. இந்த சாலையை நான்கு வழி சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்யும் பணி முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.238 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த சாலை மேம்பாட்டுக்கு பணிகளுக்கு இடையூறாக உள்ள 1604 மரங்களில் 1342 மரங்கள் வெட்டி அகற்றவும், 262 மரங்களை மறு நடவும் செய்யப்பட உள்ளது.

இதில் முதற்கட்டமாக 551 மரங்களை வெட்டி அகற்றவும், 121 மரங்களை மறு நடவு செய்யவும் பசுமை குழுவின் ஒப்புதல் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ஆணையை பெற்று தற்போது மரங்கள் வெட்டும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. மறு நடவு செய்ய வேண்டிய மரங்களின் கிளைகள் வெட்டி அகற்றப்பட்டு மரங்கள் துளிர் விடுவதற்கான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மறு நடவுக்கு தேவையான பள்ளங்களும் தோண்டப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

ஏற்கனவே மாநில நெடுஞ்சாலை துறையினரால் இத்துறைக்கு சொந்தமான சாலையோரங்கள் மற்றும் நிலங்களில் சுமார் 6 ஆயிரம் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கோவையில் வெவ்வேறு இடங்களில்

திருட்டில் ஈடுபட்ட 2 பேர் கைது

கையும் களவுமாக சிக்கினர்

கோவை, ஏப். 10: நீலகிரியை சேர்ந்தவர் மணிகண்டன் (34). இவர் கோவை பாரதியார் பல்கலை விடுதியில் தங்கிருந்து இயற்பியல் ஆராய்ச்சி படிப்பு படித்து வருகிறார். இந்நிலையில் நேற்று முன்தினம் மணிகண்டன் கேண்டீன் சென்று தனது அறைக்கு திரும்பினார். அப்போது தனது அறையில் இருந்து ஒருவர் லேப்டாப்பை திருடி செல்வதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

உடனே அவர் சத்தம் போட்டு சக மாணவர்களுடன் அந்த நபரை மடக்கி பிடித்தார். பின்னர் வடவள்ளி போலீசில் ஒப்படைத்து புகார் அளித்தார். அதன்பேரில், போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில், லேப்டாப்பை திருடியது சேலம் மேட்டூரை சேர்ந்த கார்த்திக் (45) என்பது தெரிந்தது. இதையடுத்து போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இதேபோல, கோவை சின்னவேடம்பட்டியை சேர்ந்தவர் தனுஷ்கோடி (32). இவருக்கு சொந்தமான தோட்டம் அத்திபாளையம் பகுதியில் உள்ளது. நேற்று முன்தினம் தனுஷ்கோடிக்கு அவரது தோட்டத்தில் மர்ம நபரின் நடமாட்டம் இருப்பதாக அதே பகுதியை சேர்ந்த தமிழ்செல்வன் என்பவர் போன் செய்து தெரிவித்தார்.

இதையடுத்து தனுஷ்கோடி உடனே தனது தோட்டத்திற்கு வந்து தமிழ் செல்வனுடன் தோட்டத்தை கண்காணித்தார். அப்போது மோட்டர் அறையில் வாலிபர் ஒருவர் தண்ணீர் மோட்டாரை திருட முயற்சி செய்து கொண்டு இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார். அவரை தனுஷ்கோடி, தமிழ்செல்வன் உதவியுடன் கையும் களவுமாக மடக்கி பிடித்து சரவணம்பட்டி போலீசில் ஒப்படைத்தார். போலீஸ் விசாரணையில் அவர் கணபதியை சேர்ந்த இமானுவேல் (22) என்பது தெரிந்தது. இதையடுத்து போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் BAJAJ FINSERV

பதிவு அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், லேபா, பஜாஜ் ஆட்டோ லிமிடெட் வளாகம், மும்பை புனே சாலை, அகுர்டி புனே 411035. கார்ப்பரேட் அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், புனே-அகமதுநகர் சாலைக்கு அப்பால், விமான நகர், புனே 411014. கிளை அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிட்., 1,ஆவது தளம், 104, எக்லாஸ்லர்ஸ் ரேஸ் கோர்ஸ் சாலை, தாஜ் விவாந்தா அடுத்து, கோயம்புத்தூர் 641018. அதிகாரப்பூர்வ அலுவலரின் விவரங்கள்: பெயர்: U ராஜேஸ்வரன், மின்னஞ்சல் முகவரி: u.rajeswaran@bajajfinserv.in, கைப்பேசி எண்: +91 8939057555.

பிற்சேர்க்கை IV-A [பார்க்க விதி 8(6)]

சர்பாசி சட்டம் 2002 இன் கீழான மின்-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ஏறக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ('சட்டம்') இன்கீழான அசையாச் சொத்துக்களின் விற்பனை

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கும் பரவலாக அறிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/உப கடன்தாரர்கள் / அடமானதாரர்(கள்) ஆகியோர் கீழ்காணும் அசையாச் சொத்தை பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் ('BFL') நிறுவனத்திடம் அடமானம் வைத்துள்ளனர். அது அச்சட்ட விதிகளின் கீழ் BFL நிறுவனத்தின் கீழே கையெழுத்திடுள்ள அதிகாரப்பூர்வ அலுவலரால் கவாதீனம் செய்யப்பட்டுள்ளது. மேலும் கீழே குறிப்பிட்டுள்ள தொகையை அதன் உரிய எதிர்கால வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் முதலானவற்றுடன் திரும்பப் பெறும் பொருட்டு இந்த ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது.

கீழே விவரிக்கப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்" எனும் முறைகளில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் ("விதிகள்") எனும் முறைகளில் விற்கப்படும். திருப்பம்பெற வேண்டிய நிலுவை விவரங்கள் பின்வருமாறு:

மின்-ஏல விவரங்கள்

கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி	1. சாஸ்தா ஸ்பின்னிங் மில்ஸ், இதன் உரிமை.: பழனிச்சாமி யோகநாதன், குடியிருப்பு முகவரி: 346/7B, ராமத்தூர், முத்துகவுண்டன் புதூர், கோயம்புத்தூர், கோயம்புத்தூர், தமிழ்நாடு, 641402. இன்னொரு குடியிருப்பு முகவரி: எண் 17 முத்து டெவலப்பர்ஸ், RJ டெட்ரிக் பள்ளி பின்பக்க வாயில் எதிரில், விளாங்குறிச்சி, கோயம்புத்தூர், கோயம்புத்தூர் 641035, தமிழ்நாடு. இன்னொரு முகவரி: RS எண் 172/2, 177/3A1A, மனை இட எண் 17, முத்து டெவலப்பர்ஸ், விளாங்குறிச்சி கிராமம், கோயம்புத்தூர் தாலுகா, கணபதி சார்பதிவு அலுவலக வட்டாரம், கோயம்புத்தூர் மாவட்டம் 641035, தமிழ்நாடு. 2. சுபத்ராதேவி K, தரபெ. கார்த்திகேயன் M, குடியிருப்பு முகவரி: எண் 17 முத்து டெவலப்பர்ஸ், RJ டெட்ரிக் பள்ளி பின்பக்க வாயில் எதிரில், விளாங்குறிச்சி, கோயம்புத்தூர், கோயம்புத்தூர் 641035, தமிழ்நாடு. இன்னொரு குடியிருப்பு முகவரி: 11 யூனியன் சாலை 1,ஆவது தெரு, நாசிம்மநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, 641031. 3. லோகநாதன் P, தரபெ. திரு. பழனிச்சாமி A, குடியிருப்பு முகவரி: எண் 17 முத்து டெவலப்பர்ஸ், RJ டெட்ரிக் பள்ளி பின்பக்க வாயில் எதிரில், விளாங்குறிச்சி, கோயம்புத்தூர் 641035, தமிழ்நாடு. தொடர்பு எண்: 9894312495, மின்னஞ்சல் முகவரி: sashthaaspinningmills2021@gmail.com
கடன் கணக்கு எண்	P421PLA8934341
பிரிவு 13(2)-இன்கீழ் சட்டப்படியான கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	அறிவிப்பு தேதி 08.05.2024 கோரப்பட்ட தொகை ரூ.1,00,59,936/-
09.04.2025 தேதிப்படி மொத்த நிலுவைத்தொகை	ரூ.1,15,90,348/- (ரூபாய் ஒரு கோடியே பதினைந்து லட்சத்து தொண்ணூறாயிரத்து முந்நூற்று நாற்பத்தெட்டு மட்டும்) 09.04.2025 நாள்படி
அசையாச் சொத்து விவரம்	அனைத்து துண்டு மற்றும் பகுதிகள் கொண்ட: RS எண் 172/2, 177/3A1A, மனை எண் 17, முத்து டெவலப்பர்ஸ், விளாங்குறிச்சி கிராமம், கோயம்புத்தூர் தாலுகா, கணபதி சார்பதிவு அலுவலக வட்டாரம், கோயம்புத்தூர் மாவட்டம் 641035, தமிழ்நாடு. இந்துடன் சரிவிகிதப்பங்கு கொண்ட பொதுப் பகுதி மொத்தப் பரப்பளவு 1500 சதுர அடி உட்பட. எல்லைகள்: கிழக்கு: மனை எண் 18; மேற்கு: மனை எண் 16; வடக்கு: RS எண் 172/3, 177/3A2 ஆகியவற்றில் உள்ள நிலம்; தெற்கு: 40 அடி கிழக்கு மேற்குச் சாலை.
நிர்ணய விலை (ரூபாயில்)	Rs. 97,78,159/-
முன்வைப்புத் தொகை	Rs. 977815/-
மின்-ஏல தேதி மற்றும் நேரம்	28.04.2025 அன்று முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை
மின்-ஏல வலைதளம்	https://bankauctions.in
முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி	26/04/25
ஏல உயர்வுத் தொகை (ரூபாயில்)	Rs. 25000/-
ஈடுபெற்றுக் கடனளித்தவருக்கு தெரிந்தவரையில் முன்வில்லங்கம்	ஏதுமில்லை
சொத்து ஆய்வு நாள்	11.04.2025 முதல் 26.04.2025 வரையான வேலை நாட்களில் காலை 10 மணிக்கும் மாலை 5 மணிக்கும் இடையில் முன் அனுமதியுடன்

இந்த அறிவிப்பின் மூலம் பொதுமக்களுக்கு பரவலாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரியிக்கப்படுவது யாதெனில், அட்டவணையிடப்பட்ட தேதியில் ஏலம் ஏதேனும் காரணத்தினால் நடைபெறத் தவறினால், ஈடுபெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் விருப்பத்திற்கேற்ப குறிப்பிட்ட சொத்தினை தனிப்பட்ட முறையில், ஈடுபெற்றுக் கடனளித்தவர் எனும் உரிமையின் அடிப்படையில் விற்பனை செய்யலாம். மேலும் விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அறிய, https://bankauctions.in மற்றும் https://www.bajajfinserv.in/sarfaesi-auction-notices என்ற இணையதளங்களை பார்வையிடவும்.

தேதி: 09.04.2025
இடம்: புனே

அதிகாரப்பூர்வ அலுவலர்
பஜாஜ் ஃபைனான்ஸ் லிட்.

நடப்பாண்டில் மட்டும்

கோவை நகரில் 60 பேர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது

கோவை, ஏப்.10: கோவை கோட்டைமேடு ஹாஜி வீதியை சேர்ந்தவர் சலீம் (49). இவரும் தெற்கு உக்கடம் அன்பு நகரை சேர்ந்த ஷேக் அப்துல் காதர் (50) என்பவரும் ஏசி, மோட்டார் ஆகியவற்றை ஆன்லைனில் விற்பனை செய்து வரும் வியாபாரிகளை தொடர்பு கொண்டனர். பின்னர் தாங்கள் நிறுவனம் நடத்தி வருவதாக போலியான பெயர், ஆவணங்கள் மற்றும் ஜிஎஸ்டி எண்ணை அனுப்பி வியாபாரிகளை நம்ப வைத்து ஆன்லைனில் பொருட்களை வாங்கி லட்சக்கணக்கில் ஏமாற்றியதாக புகார் எழுந்தது. பாதிக்கப்பட்டவர்கள் கோவை மாநகர சைபர் கிரைம் போலீசில் அளித்த புகாரின் பேரில், போலீசார் இருவரையும் கைது செய்து கோவை மத்திய சிறையில் அடைத்தனர். இவர்களை குண்டர் சட்டத்தில் கைது செய்ய போலீஸ் கமிஷனரிடம் பரிந்துரை செய்யப்பட்டது. அதனையேற்று மோசடி வழக்கில் கைது செய்யப்பட்ட சலீம் மற்றும் அப்துல் காதர் இருவரையும் குண்டர் சட்டத்தில் கைது செய்ய நேற்று போலீஸ் கமிஷனர் சரவண சுந்தர் உத்தரவிட்டார். அதன்படி இருவரும் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டனர். அதற்கான உத்தரவு நகல் சிறை போலீசாரிடம் வழங்கப்பட்டது. நடப்பாண்டில் இதுவரை போதை பொருள் வழக்கில் 21 பேர், வழிப்பறி, அடிதடியில் 28 பேர், பாலியல் வழக்கில் 7 பேர், சைபர் கிரைம் குற்றத்தில் 4 பேர் என மொத்தம் 60 பேர் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோவை புலியகுளம் அரசு மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா

மாநகராட்சி கமிஷனர் பட்டம் வழங்கினார்

கோவை, ஏப். 10: கோவை புலியகுளம் பகுதியில் அரசு மகளிர் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. கல்லூரியின் முதல்வர் வீரமணி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் கலந்து கொண்டு மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். இதில், கடந்த இரண்டு ஆண்டுகளில் பட்டப்படிப்பை முடித்த மொத்தம் 345 மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டது.

▶ கோவை புலியகுளம் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. இதில் மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் கலந்து கொண்டு மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். அருகில் கல்லூரி முதல்வர் வீரமணி.

விழாவில், மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன் பேசியதாவது: இந்த கல்லூரி மாநகராட்சி பள்ளி வளாகத்தில் துவங்கப்பட்டது. கல்லூரி இடத்திற்கான அனுமதி, மின்சாரம் அளிப்பதில் சிக்கல்கள் இருந்த நிலையில், முதல்வரின் உத்தரவின் பேரில் அதற்கான பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு கல்லூரியின் கட்டிடம் திறக்கப்பட்டது.

இதையடுத்து, தற்போது முதல் முறையாக பட்டமளிப்பு விழா நடக்கிறது. பட்டம் பெற்றுள்ள நீங்கள் பல நேரங்களில் உணர்ச்சிகரமான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். அந்த நேரத்தில் மிகவும் கவனமாக முடிவுகள் எடுக்க வேண்டும். தொடர்ந்து புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதில், தோல்வி அடையும் போது அமைதியாக இருக்க வேண்டும். யாரோ ஒருவர் சொல்வதை வைத்து உங்களது முடிவை எடுக்க கூடாது. அவர்கள் கூறிய கருத்தை புரிந்து கொண்டு செயல்படுத்த வேண்டும். மேலும், தமிழ்நாடு அரசு அளிக்கும் அனைத்து திட்டங்களை குறித்தும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். தொழில்முனைவோராக மாறுவதற்கான முற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

காலி இடத்தில் சட்ட விரோத செயல்கள்

குடியிருப்புவாசிகள் அச்சம்

கோவை, ஏப். 10: கோவை கவுண்டம்பாளையத்தில் உள்ள காலி இடத்தில் சட்ட விரோதசெயல்கள் அரங்கேறி வருவதால் குடியிருப்பு வாசிகள் அச்சமடைந்துள்ளனர்.

கோவை கவுண்டம்பாளையம் ஜீவா நகர் பகுதியில் குறிப்பிட்ட சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட மயானம் உள்ளது. இரு தரப்பினருக்கான உரிமை கோரல் பிரச்னையால் மயானம் தற்போது பயன்பாடு இல்லாமல் பூட்டப்பட்டுள்ளது. இந்த மயானத்தை சுற்றி கவுண்டம்பாளையம் ஹவுசிங் யூனிட் மற்றும் பொதுமக்களின் குடியிருப்புகள் என ஏராளமானவை உள்ளன. இந்நிலையில், பயன்பாடு இல்லாமல் இருக்கும் மயானத்தில் இரவு நேரத்தில் சமூக விரோதகும்பல் மதில் சுவர் ஏறி குதித்து, உட்புறமாக சென்று சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டுவதாக புகார் எழுந்துள்ளது. மயானத்தின் கேட் பூட்டப்பட்டிருக்கும் நிலையில், சமூக விரோதிகள் அத்துமீறி உள்ளே நுழைந்து மது குடிப்பது, கஞ்சா புகைப்பது மற்றும் சட்டவிரோத செயல்களுக்கு பயன்படுத்துவது போன்ற குற்றச்செயல்கள் அன்றாடம் நடப்பதாக புகார் எழுந்துள்ளது.

சமூக விரோதிகளின் செயல்பாடுகளால் மயானத்தை சுற்றி வசிக்கும் குடியிருப்புவாசிகள் அச்சமடைந்துள்ளனர். எனவே போலீசார் இப்பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட வேண்டும் என்பதோடு அப்பகுதியில் நடமாடும் சமூக விரோத கும்பல்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குடியிருப்பு வாசிகள் வலியுறுத்தி உள்ளனர்.

தொழிலாளி தற்கொலை

போலீசார் விசாரணை

பொள்ளாச்சி, ஏப்.10: பொள்ளாச்சி அருகே கஞ்சம்பட்டியை சேர்ந்தவர் மணிகண்டன் (39) கூலித் தொழிலாளி. இவர் அடிக்கடி மது குடித்து விட்டு தனது மனைவியிடம் தகராறில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. மதுவுக்கு அடிமையான மணிகண்டன் வீட்டிற்கு சரிவர பணம் கொடுக்காமல் இருந்துள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் தம்பதிக்கிடையே மீண்டும் தகராறு வந்தது. இதில் மன வேதனை அடைந்த மணிகண்டன் மதுவில் அரளி விதையை அரைத்து குடித்துள்ளார். இதையறிந்த உறவினர்கள் மணிகண்டனை மீட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். ஆனால் நேற்று காலையில் அவர் சிகிச்சை பலனின்றி இறந்தார். இது குறித்து கோமங்கலம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

சூரியன் பதிப்பகம்

பரபரப்பான விற்பனையில்

பெருமையுடன் வழங்கும்

இரண்டாம் நிலை காவலர் தேர்விற்கான சிறந்த கையேடு!

(இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்பாளர்)



உங்கள் பிரதிக்கு முந்துங்கள்!

₹675/-

QR code-ஐ ஸ்கேன் செய்து Payment செலுத்திவிட்டு, Payment செய்த ஸ்கிரீன் ஷாட்டையும் கொரியர் செய்வதற்கான முகவரி மற்றும் மொபைல் எண்ணையும் சேர்த்து 98402 24816 என்ற WhatsApp நம்பருக்கு அனுப்பி உங்கள் ஆர்டரை உறுதி செய்து கொள்ளவும்.

மணியார்டர் மற்றும் டிமாண்ட் டிராஃப்ட் அனுப்புவர்கள் சூரியன் பதிப்பகம், # 229, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை 4. என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மேலும் விவரங்களுக்கு...

72990 27361 | 98946 25343 | 74487 28022

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு... தினகரன் 8904156777

9.30 AM - 6.00 PM